Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.854/2025

**Depositions of PW- 1**

| Name | திரு.முத்துகிருஷ்ணன் | Occupation | ஓட்டுநர் |
|---|---|---|---|
| Father's name | ராமராஜ் | Calling | |
| Village | கோட்டைப்பட்டி | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of June 2026.

03.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கோட்டைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10.07.2024 அன்று நான் எனது சொந்த வேலை சம்மந்தமாக எனது TN 84 J 2737 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் முத்துலிங்காபுரத்திற்கு சென்றுகொண்டிருந்தபோது ஆஜர் எதிரி தனது TATA ACE வாகனத்தில் அதிவேகமாக வந்து நான் வருவதை பார்த்த பின்னரும் வேகமாக வந்து அங்கிருந்த வளைவில் என்மீது மோதிவிட்டார். அதில் நான் கீழே விழுந்ததில் வலது கால் கணுக்காலுக்கு கீழ் ரத்தம் கொப்பளித்து கொண்டிருந்தது. அப்போது அந்த வழியாக வந்த இசக்கி மற்றும் விக்னேஷ் என்ற நபர்களும் ஆஜர் எதிரியும் சேர்ந்து என்னை தூக்கினார்கள். பின்னர் இசக்கி என்பவரின் ஆட்டோவில் என்னை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தபோது ஏற்கனவே எனக்கும் இதய பிரச்சனை இருப்பதாலும் ரத்தம் அதிகமாக சென்றதாலும் என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். ஆனால் நாங்கள் ராஜபாளையம சக்திபாலா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு என்னை பரிசோதித்துவிட்டு

வலது கணுக்காலுக்கு கீழ் உள்ள எலும்பு உடைந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் எனக்கு அறுவை சிகிச்சை செய்த 6 ஸ்குருக்களை வைத்துள்ளார்கள். பின்னர் ஒன்றரை மாத சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினேன். போலீசார் என்னை விசாரித்தனர். அதன் பின்னர் மீண்டும் ஒரு அறுவை சிகிச்சை எனக்கு செய்யப்பட்டது. இவ்வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **புகார்மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>நீதித்துறை நடுவர் எண்.2,<br>திருவில்லிப்புத்தூர். |

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.854/2025

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.இசக்கிராஜா | Occupation | ஆட்டோ ஓட்டுநர் |
| Father's name | கருப்பையா | Calling | |
| Village | மீனாட்சிபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of June 2026.

03.06.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மீனாட்சிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10.07.2024 அன்று நான் கரைவளைந்தான்பட்டி விலக்கில் நின்றுகொண்டிருந்தபோது கோட்டைப்பட்டியை சேர்ந்த முத்துகிருஷ்ணன் என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தனது Royal Enfield இருசக்கர வாகனத்தில் வந்தார். ஆஜர் எதிரி ஓட்டிவந்த TATA ACE வாகனமானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து கொண்டிருந்தது. அப்போது எதிரி ஓட்டிவந்த TATA ACE வாகனம் அசா.1 முத்துகிருஷ்ணன் வாகனத்தின் மீது மோதியதில் அசா.1 க்கு வலது கணுக்காலுக்கு கீழ் காயமும், வலது கையில்சிராய்ப்பு காயமும் ஏற்பட்டது. உடனே நானும் அருகிலிருந்த விக்னேஷ் என்பவரும் அசா.1 ஐ தூக்கி உட்கார வைத்து அருகிலிருந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்காக சேர்த்தோம். அவரை மேல் சிகிச்சைக்காக மதுரைராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். ஆனால் அவருக்கு இருதய பிரச்சனை இருப்பதால் அவரது மனைவி அவரை ராஜபாளையத்திலுள்ள சக்திபாலா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.